அ.வ.எண்: 173/2015 நாள்:07.09.2022

**பி.வா.சா.1.செல்வம் என்கிற சிங்காரவேலு**

**வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:**

நான் கடந்த 2004 ஆம் வருடம் பெரம்பூர் ரயில்வே போலிஸ் ஸ்டேசனில் எழுத்தராக பணிபுரிந்தேன். குடும்ப சொத்துக்களை பிரித்து தரக்கோரி நான் பணிரிந்த அலுவலகத்தின் உயர் அதிகாரிகளுக்கு என்னுடைய அண்ணன் புகார் கொடுத்தார் என்றால் ஆமாம். மூன்று புகார்கள் கொடுத்தார். மேற்படி புகாரில் சொத்தை பிரித்து தரவில்லையெனில் தற்கொலை செய்து கொள்ளபோவதாக என்னுடைய தம்பி மிரட்டி எழுதியிருந்தார் என்று சொன்னால் சரிதான். புகாரில் சொல்லியுள்ளவாறு எனது தம்பிக்கு ஏதேனும் நேர்ந்தால் என்னுடைய பதவிக்கு ஏதேனும் ஆபத்து வரும் எனவே உங்கள் தம்பி கேட்டவாறு உடனடியாக செய்துவிடுங்கள் என்று எனது உயர் அதிகாரிகள் எனக்கு அறிவுறுத்தினார்கள் என்று சொன்னால் சரிதான். உடனடியாக நான் பணிபுரிந்த உதவி ஆய்வாளர் சீனிவாசன் அவர்கள் என்னுடைய சகோதர சகோதரிகளை நேரடியாக அவர்களுடைய ஊருக்கே சென்று அனைவரையும் பெரம்பூர் ரயில்வே போலிஸ்டேசனுக்கு அழைத்து வந்து பாகபிரிவினை பத்திரத்தை அவரே எழுதினார். யார் யார் கையொப்பம் செய்தீர்கள் என்றால் வாதி சித்ரா, சந்திரா, இறந்துபோன சகோதரி மலர்கொடி, முதல் பிரதிவாதி நாடிமுத்து மற்றும் நானும் கையொப்பம் செய்தேன். எந்த தேதியில் மேற்படி ஆவணத்தில் கையொப்பம் செய்தோம் என்றால் தேதி ஞாபகம் இல்லை வருடம் 2004 ஆகும். மேற்படி உதவி ஆய்வாளர் எழுதிய ஆவணத்தை எப்படி என்று பதிவு செய்தோம் என்றால் இரண்டு நாட்கள் கழித்து திருவையாறு சார் பதிவாளர் அலுவலகம் வந்து உதவி ஆய்வாளர் எழுதியிருந்த ஆவணத்தின்படி பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தி பதிவு செய்து கொண்டோம். மேற்படி ஆவணத்தின்படி அது எழுதப்பட்ட அன்றைய காலத்தில் எந்த எந்த சொத்து யார்யாருக்கு எழுதப்பட்டது என்பது அப்போது தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. பாகபத்திரம் உதவிஆய்வாளர் எதன் அடிப்படையில் தயார் செய்தார் என்றால் என்னுடைய தம்பி நாடிமுத்து கூறிய சொத்து விவரங்களின் அடிப்படையில் தான் தயார் செய்யப்பட்டது.

சாத்தனூர் கிராமத்தில் சர்வே எண். 133/2ல் உள்ள நிலம் என்னுடைய சகோதரி வாதியான சித்ராவிற்கு எழுதப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தும் என் அக்கா சித்ராவின் திருமணத்திற்கு பிறகு அவருடைய கணவரால் என்னுடைய அக்காவின் பெயரில் வாங்கப்பட்டது என்றால் சரிதான். எனது அக்கா பெயரில் உள்ள தாவா சொத்தும் சர்வே எண். 133/1ல் உள்ள சொத்தும் என்னுடைய அக்கா மற்றும் அவருடைய கணவரின் சுய சம்பாத்தியத்தால் வாங்கப்பட்டது என்று நான் அப்போதே கூறினேன் என்றால் சரிதான். 1ஆம் பிரதிவாதி என்னுடைய அக்கா சித்ராவின் பெயரில் உள்ள சொத்துக்களை அவரிடம் இருந்து அபகரிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் அந்த சொத்துக்களையும் எனக்கும் என்னுடைய மற்ற சகோதரிகளுக்கும் தெரியாமல் பாகபிரிவினை ஆவணத்தில் சேர்த்துவிட்டார் என்றால் ஆமாம் எனக்குமே அவ்வாறு சேர்த்தது அப்போது தெரியாது. நான் என்னுடைய சகளையிடம் பார்த்துக் கொள்ள சொல்லிய சொத்தை எனது சகளை 4ஆம் பிரதிவாதி ராஜேந்திரன் என்பவரிடம் ரூபாய் 25000/–க்கு 2000ஆம் ஆண்டு ஒத்திக்கு வைத்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். மேலும் 2002 ஆம் ஆண்டு ரூபாய் 20000/– மேலும் பெறப்பட்டு என் மூலம் சகோதரி சித்ரா வசம் கொடுக்கப்பட்டது. தாவா சொத்தும் மற்றும் சாத்தனூர் கிராமத்தில் உள்ள சர்வே எண். 133/2 சொத்தும் பாகபிரிவினை பாகத்தில் சேர்ந்தது வழக்கு தாக்கல் செய்த காலத்திற்கு முந்தைய நாள் வரை வாதி சித்ராவிற்கு மறைக்கப்பட்டது அவருக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். ஜீலை 2015 ஆம் வருடம் 4 ஆம் பிரதிவாதியிடமிருந்து தாவா சொத்தை மீட்டு தரும்படி எனது சகோதரி சித்ரா கூறினார் என்றால் சரிதான். அப்போது நான் 4 ஆம் பிரதிவாதி ராஜேந்திரனிடம் சென்று கேட்ட போது 1ஆம் பிரதிவாதி நாடிமுத்து 4ஆம் பிரதிவாதி மனைவியான 3ஆம் பிரதிவாதி சாந்தியிடம் விற்றுவிட்டதாக கூறினார் அதை நான் எனது சகோதரி சித்ராவிடம் சொன்னேன். 3ஆம் பிரதிவாதிக்கு 1ஆம் பிரதிவாதியால் தாவா சொத்தின் 86 செண்ட் விற்றது போக மீதி 10 செண்ட் நிலத்தை என்ன செய்ய போகிறீர்கள் என்று என் சகோதரி சித்ரா கேட்டதற்கு 2004ஆம் வருடம் பாகபிரிவினை பத்திரத்தின் அடிப்படையில் நான் விற்க போகிறேன் என்று கூறினேனா என்றால் சரிதான். நானும் எனது தம்பியும் சேர்ந்து கொண்டு எனது அக்கா சித்ராவை ஏமாற்ற வேண்டும் என்ற நோக்கில் தாவா சொத்தின் 86 செண்ட்

நிலத்தினை 3 ஆம் பிரதிவாதி பெயரில் செல்லாத ஒரு கிரைய பத்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. 2004 ஆம் வருட பாகபத்திரத்தில் என்னுடைய தகப்பனார் குடும்பத்திற்கு சொந்தமில்லாத வாதி சித்ராவிற்கு மட்டுமே சொந்தமான தாவா சொத்து மற்றும் சாத்தனூர் கிராமத்தில் உள்ள சர்வே எண். 193/2 ல் உள்ள சொத்தினையும் சேர்த்து குடும்பத்தில் பாகபிரிவினை ஏற்படுத்திக் கொண்டது வாதி சித்ராவை எந்த விதத்திலும் அந்த பாகபிரிவினை சரத்துகள் கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரிதான். அதனால் வாதி சித்ரா கோரியபடி பரிகாரம் கிடைக்ககூடியது என்று சொன்னால் ஆமாம்.

**மறுவிசாரணை:**

இல்லை.

/ஒ.ம்./

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

திருவையாறு.